**நகராட்சி அலுவலகம்,**
**போடிநாயக்கனூர் நகராட்சி**
**நாள். 23.10.2024**

**சாதாரண கூட்ட அழைப்பித ழ்**

2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30.10.2024ம் நாள் புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

**********

**பொருள்கள்**

- **1)** இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் –2024 மற்றும் செப்டம்பர் –2024 ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.
( ந.க.எண்:0999/2023/சி1 )
**தீர்மான எண் :** 665 – பதிவு செய்யப்பட்டது.

- **2)** இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் –2024 மற்றும் செப்டம்பர்–2024 ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்:0999/2023/ சி1 )

**தீர்மான எண் :** 666 – பதிவு செய்யப்பட்டது.

- **3)** திரு.ஷாஜிபினோ, அரசு சிறப்பு வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அவர்களின் 21.08.2024–ஆம் தேதிய கடிதத்தில், இந்நகராட்சியில் சங்கிலியாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்ற திரு.எம்.சாகுல் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட WP(MD)No.5883 of 2022 வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜரானமைக்கு வழக்கு கட்டணமாக ரூ.9,500/– வழங்க கோரியதன்படி, மேற்படி வழக்கறிஞர் கட்டணத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிய விவரம் மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.0572/2016/சி1)
**தீர்மான எண் :** 667 –அனுமதிக்கப்பட்டது.

- **4)** இந்நகராட்சிக்கு செந்தமான வார்டு எண்.26–ல் நகராட்சி டிப்போ ரோட்டில் பழைய வாரச்சந்தையில் புதிதாக கட்டப்பட்டுள்ள 73 வாரசந்தை கடைகள் மற்றும் வாரசந்தை நடைபெறும் இடத்திற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் முன்று ஆண்டு குத்தகை முறையில் பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி 10.10.2024 ம் தேதியில் கோரப்பட்டதில் பொது ஏலத்தில் இரண்டு நபர்கள் கலந்து கொண்டு ஏலம் கேல்வி கோரவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் ஒரு நபர் மட்டுமே கலந்து கொண்டார் கீழ்க்கண்ட விவரபடி ஒப்பந்தப்புள்ளி தொகை கோரியுள்ளனர் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் பெயர் (திருவாளர்கள்) | ஏலக்கேள்வி கோரிய தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி குறிப்பிட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு..P.ராமராஜ்,<br>த/பெ பெரியகருப்பன்<br>வெள்ளை மலைப்பட்டி<br>உசிலம்பட்டி மதுரை. | ஏலக்கேள்வி கோரவில்லை | – |
| 2 | திரு.Mசந்திரன்,<br>க/பெ மாரியப்பன்<br>25/8 புன்னைவனம் தெரு,<br>போடிநாயக்கனூர். | ஏலக்கேள்வி கோரவில்லை | – |
| 3 | திரு.T.வாசிமலை<br>த/பெ.தேவசாமி<br>உசிலம்பட்டி மதுரை. | – | 5,05,000/– |

அலுவலகக்குறிப்பு :– 1. பொது ஏலத்தில் கேள்வி இல்லை.
2. மேற்படி குத்தகை உரிமத்திற்கு வரிசை எண்.3ல் கண்டுள்ள திரு.T.வாசிமலை, என்ற ஒருநபர் மட்டும் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.5,05,000/– (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐயாயிரம் மட்டும் கோரியுள்ளார்.
3. மேற்படி உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை அரசு மதிப்பை காட்டிலும் குறைவாக உள்ளது, எனவே மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு.

(ந.க.எண்.2389/2023/அ2)

**தீர்மான எண்** : 668 –அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ 5) இந்நகராட்சிக்கு செந்தமான வார்டு எண் 22 புதுத்தெரு 2ல் உள்ள தினசரி சந்தையில் 38 கடைகளும் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான பல்வேறு வணிக வளாகங்களில் காலியாக உள்ள கடைகளுக்கு ஒன்பது ஆண்டு குத்தகை முறையில். வாடகைக்கு விடும் இனத்திற்கு 27.09.2024 ம் தேதியில் மறு பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தினசரி சந்தைக்கடைகளில் வடக்கு பக்கம் பார்த்த கடை எண்–9–க்கு பொது ஏலத்தில் கீழ்கண்ட இரண்டு நபர்கள் கலந்து கொண்டார்கள்.

| வ. எண் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் பெயர் (திருவாளர்கள்) | ஏலக்கேள்வி கோரிய தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி குறிப்பிட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.சி.ராஜமாணிக்கம்<br>S/O சொக்குபிள்ளை<br>15டி/21, ரெங்கசாமி தெரு,<br>குலாளர்பாளையம்,<br>போடிநாயக்கனூர். | 4,450/– | – |
| 2 | திரு.கே.எஸ்.கணேசன்,<br>த/பெ சோமசுந்திரம் பிள்ளை,<br>22/7, புதுத்தெரு,<br>போடிநாயக்கனூர். | 4,400/– | – |

**அலுவலகக்குறிப்பு :–** 1. ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை.
2.ஏலத்தில் கலந்து கொண்ட இருவரில் திரு.சி.ராஜமாணிக்கம் என்வர் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.4,450/– பொறியாளர் நிர்ணயம் செய்த வாடகை காட்டிலும் கூடுதலாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கு.

(ந.க.எண்.2389/2023/அ2)

**தீர்மான எண்** : 669 –அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ 6) இந்நகராட்சிக்கு செந்தமான வார்டு எண் 22 புதுத்தெரு 2ல் உள்ள தினசரி சந்தையில் 40 கடைகளும் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான பல்வேறு வணிக வளாகங்களில் காலியாக உள்ள கடைகளுக்கு ஒன்பது ஆண்டு குத்தகை முறையில் வாடகைக்கு விடும் இனத்திற்கு 27.09.2024ம் தேதியில் மறு பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தினசரி சந்தைக்கடைகளில் வடக்கு பக்கம் பார்த்த கடை எண்–10–க்கு பொது ஏலத்தில் கீழ்க்கண்ட இரண்டு நபர்கள் கலந்து கொண்டார்கள்.

| வ. எண் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் பெயர் (திருவாளர்கள்) | ஏலக்கேள்வி கோரிய தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி குறிப்பிட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.சி.ராஜமாணிக்கம்<br>S/O சொக்குபிள்ளை<br>15டி/21, ரெங்கசாமி தெரு,<br>குலாளர்பாளையம்,<br>போடிநாயக்கனூர். | 4,350/– | – |
| 2 | திருமதி.தேன்மொழி,<br>க/பெ ராஜமாணிக்கம்<br>15டி/21, ரெங்கசாமி தெரு,<br>குலாளர்பாளையம்,<br>போடிநாயக்கனூர். | 4,400/– | – |

அலுவலகக்குறிப்பு :– 1. ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை.
2.ஏலத்தில் கலந்து கொண்ட இருவரில் திருமதி.தேன்மொழி என்வர் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.4,400/– பொறியாளர் நிர்ணயம் செய்த வாடகை காட்டிலும் கூடுதலாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கு.

(ந.க.எண்.2389/2023/அ2)

**தீர்மான எண்** : 670 –அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ 7) போடிநாயக்கனூர் நகராட்சிப் பகுதியில் உள்ள 189 ஆழ்துளை கிணறு மின் விசை பம்புகள் மற்றும் 44 ஆழ்துளை கிணறு அடி குழாய்களுக்கு ஓராண்டு பராமரிப்பு மற்றும் பழுது பணிகள் ரூ.10.00/– இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 20.09.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு P. நடராஜன், போடிநாயக்கனூர் | மதிப்பீட்டை விட 0.46% கூடுதல் |
| 2 | திரு L. எல்லப்பன், போடிநாயக்கனூர் | மதிப்பீட்டை விட 0.02%குறைவு |

**அலுவலகக்குறிப்பு** : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு L.எல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**ந.க.எண்:136–1/24/இ1**

**தீர்மான எண்** : 671 –அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ 8) போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்9ல் உள்ள புதுக்காலனி தெரு எண்4ல் விடுபட்ட பகுதியில் புதிய பாதாளசாக்கடை இணைப்பு வழங்கும் பணியினை ரூ.5.00/- இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 20.09.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு P. நடராஜன், போடிநாயக்கனூர் | மதிப்பீட்டை விட 0.13% குறைவு |
| 2 | திரு L. எல்லப்பன், போடிநாயக்கனூர் | மதிப்பீட்டைவிட 0.96% கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு P.நடராஜன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**ந.க.எண்:1720/24/இ1**

**தீர்மான எண் :** 672 –அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ 9) போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள குளோரின் பிளான்ட் சரி செய்யும் பணியினை மேற்கொள்ள 25.09.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|
| 1 | M/S SIVAALIK RATHINAM CHEMICALS, ERODE | மதிப்பீட்டை விட 0.18% குறைவு |
| 2 | M/S JUPITOR ENTERPRISES, THINDAL | மதிப்பீட்டைவிட 2.15% கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள M/S SIVAALIK RATHINAM CHEMICALS, ERODE நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**ந.க.எண்:1277–2/24/இ1**

**தீர்மான எண் :** 673 –அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ 10) போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் உள்ள கேஸ் லைன் (Gas Line) மற்றும் நீராவி அடுப்பு (Boiler)ல் ஏற்பட்டுள்ள பழுதினை சரி செய்யும் பணியினை மேற்கொள்ள 25.09.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|
| 1 | M/S S.V.P INDUSTRIES, CHINNAMANUR | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு |
| 2 | M/S S.V INDUSTRIES, MADURAI | மதிப்பீட்டைவிட 0.69% கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள M/S S.V.P INDUSTRIES, CHINNAMANUR நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**ந.க.எண்:1277–1/24/இ1**

**தீர்மான எண் :** 674 –அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

- 11) போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகனங்களுக்கான காப்பீடு உரிமத்தினை 2024–25ம் வருடத்திற்கு புதுப்பிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 (இலட்சம்)யை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்:1178/24/இ1**
**தீர்மான எண்** : 675 –அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

- 12) போடிநாயக்கனூர் நகராட்சி குடிநீர் திட்டத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் தலைமை குடிநீர் நிலையம் ஆகியவற்றை இயக்குதல் மற்றும் பராமரித்தல் செய்ய தேவையான பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் பராமரிப்பு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து உரிய உத்திரவு வரப்பெறும் வரை ஏற்கனவே பராமரிப்பு பணி மேற்கொள்ளும் திருமதி T.தவமணி என்பவரின் பராமரிப்பு காலத்தை மூன்று மாத காலம் (அக்டோபர், நவம்பர், டிசம்பர்) நீடிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ11.70/– இலட்சத்தினை பொதுநியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்: 2489/2023/இ1**
**தீர்மான எண்** : 676 – அனுமதிக்கப்பட்டது.

- 13) போடிநாயக்கனூர் நகராட்சி பாதாளசாக்கடை திட்டத்தில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குதல் மற்றும் பராமரித்தல் செய்ய தேவையான பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் விநியோகம் செய்ய வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தனியார் மூலம் பராமரிப்பு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து உரிய உத்திரவு வரப்பெறும் வரை ஏற்கனவே பராமரிப்பு பணி மேற்கொள்ளும் திருமதி T.தவமணி என்பவரின் பராமரிப்பு காலத்தை மூன்று மாத காலம் (அக்டோபர்,நவம்பர்,டிசம்பர்) நீடிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ7.50/– இலட்சத்தினை பொதுநியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்: 2890/2023/இ1**
**தீர்மான எண்** : 677 – அனுமதிக்கப்பட்டது.

- 14) போடிநாயக்கனூர் நகராட்சி குடிநீர் திட்டத்தில் உள்ள இரண்டு கழிவுநீர் உந்துநிலையங்களை இயக்குதல் பராமரித்தல் மற்றும் நகரில் பாதாள சாக்கடை குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் சரி செய்ய தேவையான பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் பராமரிப்பு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து உரிய உத்திரவு வரப்பெறும் வரை ஏற்கனவே பராமரிப்பு பணி மேற்கொள்ளும் திருமதி T.தவமணி என்பவரின் பராமரிப்பு காலத்தை மூன்று மாத காலம் (நவம்பர், டிசம்பர், ஜனவரி(2025) வரை) நீடிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ5.50/– இலட்சத்தினை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்:** 2886/2023/இ1
**தீர்மான எண்** : 678 – அனுமதிக்கப்பட்டது.

❖ 15) போடிநாயக்கனூர் நகராட்சிக்கு KFW திட்டத்தின் கீழ் கொட்டக்குடி சாம்பலாறை நீர் ஆதாரமாக கொண்டு ஒரு குடிநீர்த்திட்டமும், மூலதன மான்ய நிதியின் கீழ் எல்லப்பட்டியில் முல்லை பெரியாறு நீரை ஆதாரமாக கொண்டு ஒரு குடிநீர்த்திட்டமும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் முடிக்கப்பட்டு, சோதனை ஓட்டம் முடிவுற்று தொடர் பராமரிப்பு பணிகளுக்காக இந்நகராட்சி வசம் ஒப்படைக்க உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், போடிநாயக்கனூர் அவர்கள் கடிதம் எண்/எல்.போடி/WSIS/AEE/2023, நாள்.31.07.2024ன் படி கோரியுள்ளார். எனவே மேற்படி இரண்டு குடிநீர் திட்டங்களையும் தொடர் பராமரிப்பிற்கு இந்நகராட்சி மூலம் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** அனுமதிக்கலாம்.
ந.க.எண்.713/2015/இ1
**தீர்மான எண்** : 679 – அனுமதிக்கப்பட்டது.

❖ 16) இந்நகராட்சியில் நடைபெறும் திட்டப்பணிகளை நாளிதழில் தொழில்மலர் விளம்பரம் செய்தமைக்கு கீழ்காணும்படி விளம்பர கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விளம்பர நிறுவனம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தினமலர் | 19,425/- |
| 2 | மாலைமுரசு | 15,000/- |

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1503-1/24/இ1)
**தீர்மான எண்** : 680 – அனுமதிக்கப்பட்டது.

❖ 17) இந்நகராட்சியில் மூன்றாண்டு சாதனையின் கீழ் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்காணும்படி விளம்பர கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விளம்பர நிறுவனம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தினகரன் | 20,034/- |
| 2 | M/S VINOD PUBLICITY (தினதந்தி) | 18,300/- |

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1503/24/இ1)
**தீர்மான எண்** : 681 – அனுமதிக்கப்பட்டது.

❖ 18) இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு வரும் சேமநலநிதி தொகைகளுக்கான வட்டித்தொகையினை 2019-2020 முதல் 2023-2024 வரை கணனி மூலம் கணக்கீடு செய்து வட்டி பிரேரணை தயார் செய்து இயக்குநர் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையிடம் ஒப்புதல் பெறுவதற்க்கு கீழ்க்காணும் விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| **வ எண்** | **விவரம்** | **தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | RajRev Soft System,Chennai | 99,030/- |
| 2 | NTECH Solutions,Chennai | 1,04,285/- |
| 3 | Venkat Events,Chennai | 1,09,540/- |

**அலுவலக குறிப்பு :** 1 மேற்காணும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய RajRev Soft System, Chennai நிறுவனத்தாரர்க்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்காணும் பணிக்கான செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1371/2024/பி3)**

**தீர்மான எண்** : 682 – அனுமதிக்கப்பட்டது.

❖ 19) இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியானது Ourland Engineering wrok (p) Ltd சென்னை என்ற நிறுவனத்தின் மூலம் மூன்றாண்டு காலத்திற்கு கடந்த 16.06.2023 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் பணி நீட்டிப்பு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் படி நகர்மன்ற தீர்மான எண்–575 நாள்–18.07.2024–ன் படி ஏற்கனவே வழங்கப்பட்ட மூன்று மாத கால நீட்டிப்பு 15.09.2024–ல் முடிவடைவதால் 16.09.2024 முதல் 15.06.2025 வரை ஒன்பது மாத காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட நிபந்தனைகளின்படியே ஒப்பந்த நீட்டிப்பு செய்திடவும் அதற்கான செலவினம் தோராயமாக ரூ.324.00/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3055/2022/எச்1)**

**தீர்மான எண்** : 683 அலுவலக குறிப்பு நிபந்தனையின் படி (கீழ்கண்ட) அனுமதிக்கப்பட்டது.

1. அரசு அனுமதிக்கப்பட்ட எடையை விட கூடுதலாக எடைக்கு தொகை வழங்க கூடாது.
2. தினமும் குப்பைகள் எடை போடும் ரசீதுகளை முறையாக ஆய்வு செய்து பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும்
3. மக்கும் குப்பை, மக்காத குப்பைகள் தரம் பிரித்து வழங்கும் அளவிற்கு மட்டும் தொகை வழங்கப்பட வேண்டும்.
4. நிபந்தனை மீது ஒப்பந்த நிறுவனம் செயல்படும் பட்சத்தில் உரிய அபராதம் விதிக்கப்பட்டு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட வேண்டும்.
5. மேலும் குறைபாடு தொடர்பாக பெற மனுக்களை குறித்து நகர்மன்ற உறுப்பினர் மூலம் கமிட்டி அமைத்து செயல்படுத்த அனுமதிக்கவும்.

❖ 20) இந்நகராட்சி பகுதியில் அரசு மருத்துவமனை வளாகத்தில் இயங்கிவரும் நோயாளிகளின் உறவினர்கள் தங்குவதற்கான விடுதியினை கடந்த 20.11.2023 ம் தேதி முதல் மதுரை சுரபி அரக்கட்டளை மூலம் ஓராண்டிற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணி உத்தரவு காலமானது 19.11.2024–ல் நிறைவு பெறவுள்ளது. மேற்படி பணிகாலத்தை மேலும் ஒரு ஆண்டிற்கு நீட்டிப்பு செய்ய சுரபி அரக்கட்டளை மதுரை நிறுவனத்தினரால் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாலும் கடந்த ஓராண்டு காலமாக சுரபி அரக்கட்டளை செயல்பாடுகள் திருப்திகரமாக இருந்து வருவதாலும் ஏற்கனவே வழங்கப்பட்ட நிபந்தனைகள் அடிப்படையில் 20.11.2024 முதல் ஓராண்டு காலத்திற்கு சுரபி அரக்கட்டளை மதுரை நிறுவனத்திற்கு பணி உத்தரவினை நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் : 1065/ 2013/ 24 / எச்1 )**

**தீர்மான எண்** : 684 – அனுமதிக்கப்பட்டது.

❖ 21) இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரியும் நிரந்தர தூய்மைப் பணியாளர்களில் 33 நபர்களுக்கும் மற்றும் நிரந்தர துய்மைப்பணி மேற்பார்வையாளர்களில் 6 நபர்களுக்கும் 2024–2025–ம் ஆண்டிற்கு தேவையான மழைக்கோட் மற்றும் காலணிகள் வாங்கி வழங்கிடவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.1.00/– இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் : 2255 / 2013/24 / எச்1 )**

**தீர்மான எண்** : 685 – அனுமதிக்கப்பட்டது.

❖ 22)இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் , நகர்நல செவிலியர்கள் மற்றும் அனைத்து பிரிவு சீருடை பணியாளர்களுக்கும் அரசாணை எண் 37, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.3) துறை நாள்: 14.05.1999 படி, 2024–2025 ஆம் ஆண்டிற்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அரசு நிறுவனமான கோ ஆப்டெக்ஸ் , நிறுவனத்தில் சீருடைகள் வாங்கி வழங்கவும், சீறுடைகள் தைப்பதற்கு அரசு நிர்ணய விகிதத்தில் தையற்கூலி வழங்கவும் உத்தேச செலவினம் ரூ.3.00/– இலட்சத்தினத்தை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலககுறிப்பு :மன்றம் அனுமதிக்கலாம்
**( ந.க.எண் : 4733 / 2017 / எச்1 )**
**தீர்மான எண்** : 686 – அனுமதிக்கப்பட்டது.

❖ 23)இந்நகராட்சியில் SBM 2.0 திட்டத்தின் கீழ் இரண்டு கழிவுநீர் வாகனங்கள் புதியதாக வாங்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனங்களை இயக்குவதற்கு நகராட்சியில் போதுமான ஓட்டுநர்கள் இல்லை .எனவே ஓட்டுநர் பற்றாக்குறையை சரிசெய்யும் பொருட்டு புதியதாக ஒப்பந்த அடிப்படையில் இரு ஓட்டுநர்களை பணியில் ஈடுபடுத்திடவும் அதற்கான செலவினம் தேனி மாவட்ட ஆட்சியர் தினக்கூலி விலை விகித அடிப்படையில் தோராயமாக ஆண்டிற்கு ரூ.8.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலககுறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.
**( ந.க.எண் : 013 / 2023/ எச்1 )**
**தீர்மான எண்** : 687 – அனுமதிக்கப்பட்டது.

❖ 24) இந்நகராட்சி பகுதியில் இயங்கி வரும் நகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள் மற்றும் பள்ளி வளாகத்தில் தூய்மைப்பணிகள் செய்ய ஒப்பந்த முறையில் 7 பணியாளர்கள் ஈடுப்படுத்தப்படுவதற்கு கடந்த 01.12.2023 முதல் 30.11.2024 முடிய ஒருவருட காலத்திற்கு பணியை செய்ய உத்தரவிடப்பட்டது. வருகின்ற 30.11.2024ம் தேதியுடன் ஓராண்டு முடிவடைவதால் 01.12.2024 முதல் மேலும் ஓராண்டு காலத்திற்கு ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள நிறுவனமான சங்கர் இன்ஜினியரிங்,சென்னை நிறுவனத்திற்கு ஏற்கனவே உள்ள நிபந்தனைகளின் படியே பணி நீட்டிப்பு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலககுறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.
**( ந.க.எண் :2815 / 2013/24 / எச்1 )**
**தீர்மான எண்** : 688 – அனுமதிக்கப்பட்டது.

❖ 25) வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு வடிகால்கள் மற்றும் சிறு ஓடைகளை சுத்தம் செய்து பொதுமக்களை வெள்ள பாதிப்புகளில் இருந்து பாதுகாத்துகொள்ள போர்கால அடிப்படையில் செயல்படுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தேனி அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள வஞ்சி ஓடை செடி கொடிகள் வளர்ந்து புதர்மண்டி குப்பைக் கூழங்களுடன் மழைநீர் வடிவதற்கு இடையூறாக அமைந்துள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி உடனடியாக கிட்டாச்சி பொக்லைன் (EXCAVATOR) மூலம் சுத்தம் செய்ய வேண்டிய சூழ்நிலையில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (கிட்டாச்சி பொக்லைனுக்கு) ஒரு மணி நேரம் வாடகை |
|---|---|---|
| 1 | சங்கர் இன்ஜினியர்ங் , ஜெயம் நகர் –போடி | ரூ.2,300/– |
| 2 | S D S பைபர்ங், விரடுலூர்–மதுரை | ரூ.2,000/– |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள SDS பைபர்ஸ், விரகனூர்–மதுரை என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ–2.50/–ற்கு மன்றம் வேன்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
**( ந.க.எண் : 3244/ 2023/24 / எச்1 )**
**தீர்மான எண்** : 689 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ 26) வருகின்ற 31.10.2024 தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நகரின் பிரதான சாலையான காமராஜர் சாலை மற்றும் பெரியாண்டவர் ஹைரோடு பகுதிகளில் அத்தியாவசிய பொருட்கள் சம்மந்தமான தற்காலிக கடைகள் வியாபாரிகளால் ஒவ்வொரு ஆண்டும் அமைக்கப்படும். இக்கடைகளில் பண்டிகை பொருட்கள் வாங்கும் பொருட்டு பொதுமக்கள் அதிக அளவு கூடுவது வழக்கம். அதுசமயம் பொது மக்கள் இயற்கை உபாதைகள் கழிப்பதற்க்கு கழிப்பறை வசதிகள் இல்லாததால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். எனவே, பொதுமக்கள் சிரமத்தை குறைக்கும் வகையிலும் பொதுசுகாதாரத்தை பாதுகாக்கும் வகையிலும் தற்காலிகமாக நடமாடும் கழிப்பறைகள் அமைப்பது அவசியமாகும் எனவே வருகின்ற 29.10.2024 மற்றும் 30.10.2024 ஆகிய இரு தினங்களுக்கும் மேற்படி பகுதிகளில் தற்காலிகமாக மூன்று நடமாடும் கழிப்பறைகள் அமைத்திட அவசரம் அவசியம் கருதியும் பொதுசுகாதார நலன் கருதியும் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு விலைபுள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | கிரான்ட்டெக்கரேடர்ஸ் & மேனேஜ்மென்ட் மதுரை | 54,870/– |
| 2 | வி.சி சானிடேசன் சென்னை | 63,720/– |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள கிரான்ட் டெக்கரேடர்ஸ் & மேனேஜ்மென்ட் மதுரை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிடவும் அதற்கான செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
**( ந.க.எண் : 4167 /2023/ எச்2 )**
**தீர்மான எண்** : 690 – அனுமதிக்கப்பட்டது.

❖ 27) இந்நகராட்சி பகுதியில் தினசரி உருவாகும் திடக்கழிவுகளில் உலர்ந்த மறுசுலர்ச்சி செய்யக்கூடிய கழிவுகள் மட்டும் சுமார் 8 டன் சேகரமாகிறது. மறு சுழற்ச்சி செய்யக்கூடிய கழிவுகளை நகராட்சி நுண்உயிர் உரக்கிடங்கிற்கு அருகில் உள்ள வளமீட்பு மையத்தில் சேகரிக்கப்பட்டு வருகிறது. அக்கழிவுகளை அரியலூர் மாவட்டத்தில் இயங்கி வரும் சிமெண்ட் ஆலைக்கு லாரியின் மூலம் அனுப்பிவைப்பதற்கு லாரி வாடகை செலவினம் மேற்கொள்ளும் பொருட்டும். ஏற்கனவே நகர் மன்ற அனுமதி பெற்று முறையாக கழிவுகள் அகற்றப்பட்டுவருகிறது. தினமும் சேகரிக்கப்படும் உலர் கழிவுகளால் , வளமீட்பு

மையத்தின் முழு கொள்ளவும் நிறைந்துவிடுகிறது. எனவே சேகரிக்கப்படும் கழிவுகளை அவ்வப்போது அகற்ற வேண்டிய சூழ்நிலை உள்ளதால்.மேற்படி கழிவுகளை அகற்றுவதற்கு கூடுதலாக ரூ.5.00 லட்சம் தேவைப்படுவதால் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண் : 3055/ 2022 / எச்1 )**

**தீர்மான எண்** : 691 – அனுமதிக்கப்பட்டது.

(ஒம்)திருமதி.ச.ராஜராஜேஸ்வரி
நகர்மன்ற தலைவர்
போடிநாயக்கனூர் நகராட்சி

// உண்மைநகல் //

ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி